ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க

ஒப்பந்தபணிகளுக்கான ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் 2026–னை இன்று (01.07.2026), தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் திரு. என். ஆனந்த் அவர்கள் வெளியிட்டார்.

இந்த வழிகாட்டு நெறிமுறைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் ஒப்பந்தப்பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் 2026 என்று அழைக்கப்படும். இவை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் (RD&PR) அறிவிக்கப்பட்ட கொள்முதல் அமைப்புகளால் செயல்படுத்தப்படும் அனைத்து ஒப்பந்தப் பணிகளுக்கும் பொருந்தும்.

இந்த வழிகாட்டுநெறிமுறைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்வது தொடர்பாக இதற்கு முன் வெளியிடப்பட்ட அனைத்து வழிகாட்டுதல்கள், அறிவுரைகள் மற்றும் அரசாணைகளுக்கு மாற்றாக அமையும். இதில் அரசாணை (நிலை) எண். 109, ஊ.வ மற்றும் ஊ. து (SGS–2), நாள் 27.06.2024 மற்றும் அரசாணை (நிலை) எண். 366, ஊ.வ மற்றும் ஊ. து (SGS–2), நாள் 29.12.2025 ஆகியவையும் அடங்கும்.

1. **ஒப்பந்ததாரர் (Contractor):**

ஒப்பந்தப் பணிக்கான ஒப்பந்ததாரர் என்பவர் ஒரு தனிநபராகவோ, கூட்டாண்மை நிறுவனமாகவோ, நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவோ, பதிவு செய்யப்பட்ட சங்கமாகவோ அல்லது அரசால் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட, தனித்துவமான சட்டப்பூர்வ அங்கீகாரம் கொண்ட மற்றும் 1872– ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படி ஒப்பந்தம் செய்துகொள்ளும் தகுதிவாய்ந்த பிற அமைப்பாகவோ இருக்கலாம்.

2. **கொள்முதல் மேற்கொள்ளும் அமைப்புகள் (Procuring entities):**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அறிவிக்கப்பட்ட கொள்முதல் அமைப்புகள் பின்வருமாறு:–

- செயல் அலுவலர் , கிராம ஊராட்சி
- வட்டார வளர்ச்சி அலுவலர் (வ ஊ) மற்றும்
  வட்டார வளர்ச்சி அலுவலர் (கி ஊ)
- திட்ட இயக்குநர் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

3. **வங்கி உத்திரவாதம் (Bank Guarantee):**

வங்கி உத்திரவு மின்னணு வடிவில் இருக்க வேண்டும்.

4. **பதிவு செய்யும் அலுவலர் (Registering Authority):**

i. **மாவட்ட அளவில் மட்டுமே பதிவு:** மாவட்டத்திற்குள் உள்ள அனைத்துக் கொள்முதல் அமைப்புகளுக்குமான ஒப்பந்ததாரர்களின் பதிவானது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் (DRDA) செய்யப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்கள் எந்தப் பகுதியில் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க விரும்புகிறார்களோ, அதன் அடிப்படையில் பதிவு செய்துகொள்ளலாம்.

ii. ஒரு மாவட்டத்தின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் (DRDA) பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள், அந்த மாவட்டத்திற்குள் உள்ள அனைத்துக் கொள்முதல் அமைப்புகளாலும் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கத் தகுதி உடையவர்களாவார்கள்.

iii. **அண்டை மாவட்டங்களில் பங்கேற்பு:** ஒட்டுமொத்த மாநில அளவிலான பொதுவான பதிவுமுறை பின்பற்றப்படாது. இருப்பினும், ஒப்பந்ததாரர்கள் தாங்கள் பதிவு செய்துள்ள மாவட்டத்தின் புவியியல் ரீதியாக எல்லையப் பகிர்ந்துகொள்ளும் மாவட்டங்களின் அனைத்துக் கொள்முதல் அமைப்புகளாலும் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கத் தகுதி உடையவர்களாவார்கள்.

எடுத்துக்காட்டு: திருநெல்வேலி மாவட்டத்தில் பதிவுசெய்த ஒரு ஒப்பந்ததாரர், அதன் அண்டை மாவட்டங்களான கன்னியாகுமரி, தென்காசி மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று மாவட்டங்களின்

கொள்முதல் அமைப்புகளால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கத் தகுதி உடையவர்களாவார்கள்.

iv. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் தங்களது மாவட்டங்களைச் சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள், தடைசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் கருப்புப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் பட்டியலைப் பராமரிக்க வேண்டும்.

v. இப்பட்டியல் மாவட்ட ஒப்பந்த அறிவிப்பிதழ்கள், துறைசார் மற்றும் மாவட்ட இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும்; மேலும் இப்பட்டியல் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும்.

vi. ஒரு மாவட்டத்தில் வட்டார அளவில் ஏற்கெனவே பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரராக இருந்தால் அவர், அந்த மாவட்டத்தின் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் தானாகவே சேர்க்கப்படுவார். அத்தகைய ஒப்பந்ததாரர்களுக்கு, அவர்கள் ஏற்கெனவே பதிவு செய்திருந்த வகுப்பிற்குரிய அதிகபட்ச நிதி வரம்பிற்கு இணையான புதிய வகுப்பு ஒதுக்கப்படும்.

5. ஒப்பந்ததாரர்களின் வகைப்பாடு (Classification of Contractors)

i. **வகுப்புகளின் எண்ணிக்கை:** ஒப்பந்ததாரர்கள் 3 வகுப்புகளாக வகைப்படுத்தப்படுவார்கள். ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்பதற்கான நிதி வரம்பு, அவர்கள் சமர்ப்பிக்கும் தகுதி ஆவணங்கள் மற்றும் விண்ணப்பதாரரின் அனுபவம்/செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். ஒப்பந்ததாரரின் வகுப்பு ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி கோரத் தகுதியுடைய ஒற்றைப் பணியின் அதிகபட்ச மதிப்பைத் தீர்மானிக்கும்.

அட்டவணை I (Table I) – ஒப்பந்ததாரர்களின் வகைப்பாடு

வகுப்பு (Class)	ஒற்றைப் பணியின் மதிப்பு (அதிகபட்ச மதிப்பீடு)	குறைந்தபட்ச பதிவு வைப்புத் தொகை
வகுப்பு IA (Class IA)	பிற துறை ஒப்பந்ததாரர்கள்	இல்லை (Nil)
வகுப்பு I (Class I)	ரூ. 50 இலட்சத்திற்கு மேல் மற்றும் ரூ. 2 கோடி வரை	ரூ. 4 இலட்சம்
வகுப்பு II (Class II)	ரூ. 50 இலட்சம் வரை	ரூ. 1 இலட்சம்
புதிய விண்ணப்பதாரர்	ரூ. 10 இலட்சம் வரை	ரூ. 20,000

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதிவுத் தொகை குறைந்தபட்ச அளவே ஆகும். ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்யும் போதோ அல்லது அதற்குப் பின்னரோ கூடுதல் வைப்பு தொகை செலுத்தி தங்களின் பதிவுத் திறனை 50 மடங்காக உயர்த்திக் கொள்ளலாம்.

6. பதிவு செய்வதற்கான தகுதி வரம்புகள் (வகுப்புகள் I, II மற்றும் புதிய விண்ணப்பதாரர்)

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:–

குறைந்தபட்ச வணிகக் காலம் (Minimum Business Existence):

i. விண்ணப்பதாரர்/ஒப்பந்ததாரர் கட்டுமானத் தொழிலில் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் இருந்திருக்க வேண்டும்.

நிதித் திறன் (Financial Capacity):

ii. ஒப்பந்ததாரர், முந்தைய பத்து நிதியாண்டுகளில் ஏதேனும் ஒரு நிதியாண்டில், தான் பதிவு செய்யக் கோரும் மதிப்பில் 20% க்கு இணையான சரக்கு மற்றும் சேவைகள் (GST) பரிவர்த்தனை செய்திருக்க வேண்டும்.

iii. ஒப்பந்ததாரர், தான் பதிவு செய்யக் கோரும் மதிப்புக்கு சமமான அல்லது அதற்கு அதிகமான ஆண்டு வருமானம் கொண்டிருத்தல் வேண்டும். இத்துடன் தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் தணிக்கை சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

iv. பதிவு செய்யக் கோரும் ஒப்பந்ததாரர், தற்போதைய தேதி வரை சரக்கு மற்றும் சேவைகள் (GST) மற்றும் வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்திருக்க வேண்டும்.

தொழில்நுட்பத் திறன் – கட்டுமானப் பணி அனுபவம் (Technical Capacity):

v. ஒப்பந்ததாரர், முந்தைய 10 நிதியாண்டுகளில் ஏதேனும் ஓராண்டில், தான் பதிவு செய்யக் கோரும் மதிப்பில் 50%–க்கு இணையான கட்டுமானப் பணிகளைச் செய்திருக்க வேண்டும்.

vi. எடுத்துக்காட்டு : ஒரு ஒப்பந்ததாரர் 2026–27 ஆம் ஆண்டில் பதிவு செய்ய விண்ணப்பித்தால், முன் அனுபவத்திற்கு, 2016–17 ஆம் ஆண்டு முதல் அவர் செய்த பணிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

vii. தனியார் துறையில் பெற்ற கட்டுமான அனுபவமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

பணி அனுபவத்தைக் கணக்கிடுதல் (Calculation of work experience)

viii. கடந்த 10 ஆண்டுகளில் ஏதேனும் ஒரு ஆண்டில் செய்யப்பட்ட கட்டுமானப் பணிகளின் மதிப்பைக் கணக்கிடும் போது, நடப்பு ஆண்டு வரை ஆண்டுக்கு 5% என்ற விகிதத்தில் மதிப்பு கூட்டப்பட்டு தற்போதிய மதிப்பு கணக்கிடப்படும்.

எடுத்துக்காட்டு: ஒரு ஒப்பந்ததாரர் 2020–21 ஆம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள ஒரு பணியைச் செய்திருந்தால், அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு, அதாவது 2026–27 ஆம் ஆண்டு வரை, 30% மதிப்பு கூட்டப்படும்; இதன் மூலம் அதன் தற்போதைய மதிப்பு ரூ. 26 இலட்சமாகக் கணக்கிடப்படும்.

ix. நிதித் திறன் மற்றும் கட்டுமானப் பணி அனுபவம் ஆகிய இரண்டு தகுதி வரம்புகளும் தனித்தனியானவை மற்றும் கட்டாயமானவை ஆகும் (புதிய ஒப்பந்ததாரர்கள் தவிர).

உயர் மதிப்பு ஒப்பந்தங்களுக்குப் பதிவு தேவையில்லை (No registration for high value contracts)

x. ரூ. 2 கோடிக்கும் மேல் மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளிகளுக்கு, ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வரம்புகளைப் பூர்த்தி செய்யும் எந்தவொரு ஒப்பந்ததாரரும் இத்தகைய ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கலாம். அத்தகைய ஒப்பந்ததாரர்கள் 'வகுப்பு IA (சிறப்புப் பிரிவு)' என வகைப்படுத்தப்படுவார்கள்.

புதிய விண்ணப்பதாரர்கள் – முன் அனுபவம் இல்லாதவர்கள் (New Entrants)

xi. கட்டுமானப் பணிகளில் எவ்வித முன் அனுபவமும் இல்லாத, முற்றிலும் புதிதாக விண்ணப்பம் செய்பவர்கள், தேவையான நிதி ஆவணங்களை (சரக்கு மற்றும் சேவைகள் வரி மற்றும் ஆண்டு வருமானம்) சமர்ப்பிப்பதற்கு உட்பட்டு, அதிகபட்சமாக ரூ. 10 லட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு மட்டுமே பதிவு

செய்யப்படுவார்கள். அத்தகைய ஒப்பந்ததாரர்கள் 'புதிய ஒப்பந்ததாரர்' என்ற பிரிவில் சேர்க்கப்படுவார்கள்.

7. **பதிவுத் தொகை மற்றும் அதிகபட்ச பணி வரம்பு (50 மடங்கு விதி)**

i. பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் மூன்று ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் வகையிலான, திரும்பப் பெற முடியாத வங்கி உத்திரவாதத்தைப் பதிவுத் தொகையாக வழங்க வேண்டும்.

ii. **குறைந்தபட்ச பதிவுத் தொகையானது** அட்டவணை I-இல் குறிப்பிட்டுள்ளபடி இருக்க வேண்டும்; இது அந்தந்த வகுப்பின் உச்ச வரம்பினை 50-ஆல் வகுத்துக் கணக்கிடப்படுகிறது.

iii. அதிகபட்ச பணி வரம்பு (50 மடங்கு விதி): ஒரு ஒப்பந்ததாரர் தனது பதிவுத் தொகையைப் போல அதிகபட்சமாக 50 மடங்கு மதிப்புள்ள பணிகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடியும்.

iv. ஒப்பந்ததாரர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் **கூடுதல் பதிவுத் தொகை** செலுத்தி தங்களின் பதிவுத் திறனை 50 மடங்காக அதிகரித்து கொள்ளலாம்.

v. வகுப்பு வரம்பானது ஒரு ஒற்றைப் பணியின் மதிப்பிற்கு மட்டுமே பொருந்தும். ஆனால், இந்த 50 மடங்கு விதியானது, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளக்கூடிய பணிகளின் மொத்த மதிப்பைக் கட்டுப்படுத்துக்கிறது.

vi. குறைந்த புள்ளி கோரிய ஒப்பந்ததாரரின் (L1) இறுதித் தகுதியானது, அந்தந்த ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் திறன்'-இன் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

vii. **சுய சான்றொப்பமிட்ட உறுதிமொழிப் பத்திரம்:** ஒப்பந்தப்புள்ளியைச் சமர்ப்பிக்கும் போது, ஒப்பந்ததாரர்கள் தங்களிடம் தற்போது கைவசம் உள்ள பணிகளின் விவரங்கள் அடங்கிய சுய சான்றொப்பமிட்ட உறுதிமொழிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கான நிபந்தனை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்திலும் சேர்க்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி ஆய்வு மேற்கொள்ளும் அலுவலர்கள், அதிகபட்ச பணி வரம்பிற்கு உட்பட்டு உள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.

8. **பதிவு செய்யாத ஒப்பந்ததாரர்கள் (Unregistered Contractors)**

i. **பங்கேற்க அனுமதி:** எந்தவொரு மாவட்டத்திலும் பதிவு செய்யாத ஒரு ஒப்பந்ததாரரும், ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகுதி

வரம்புகளையும் பூர்த்தி செய்யும் பட்சத்தில், பதிவு செய்யாத ஒப்பந்ததாரராக ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்கலாம்.

ii. **பாதுகாப்பு வைப்புத்தொகை (Failsafe Deposit):** அத்தகைய ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியை வெல்லும் பட்சத்தில், நிர்ணயிக்கப்பட்ட பிணைத் தொகைக்கு இணையான தொகையை, திரும்பப் பெற முடியாத வங்கி உத்திரவாத வடிவில் 'பாதுகாப்பு வைப்புத்தொகையாக (Failsafe Deposit)' செலுத்த வேண்டும்.

iii. முன்பு எந்தவொரு அரசுத் துறையிலும் பணி அனுபவம் இல்லாத, முற்றிலும் புதிய தனியார் துறை நிறுவனங்களும், அந்த ஒப்பந்தப்புள்ளிக்கு நிர்ணயிக்கப்பட்ட பிணைத் தொகைக்கு இணையான பாதுகாப்பு வைப்புத்தொகையை வழங்க வேண்டும். பணிகள் வெற்றிகரமாக முடிவடைந்தவுடன், இந்த 'பாதுகாப்பு வைப்புத்தொகை (Failsafe Deposit)' விடுவிக்கப்படும்.

iv. பணியை வெற்றிகரமாக முடித்தவுடன், அத்தகைய ஒப்பந்ததாரர் தேவையான பதிவுத் தொகை மற்றும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு உட்பட்டு, அந்த மாவட்டத்தின் ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் தானாகவே சேர்க்கப்படுவார்.

9. **பிற துறைகளில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் (Contractors Registered with other Departments)**

i. **பங்கேற்க அனுமதி**: எந்தவொரு அரசுத் துறையிலும் கட்டுமான பணிகளைச் செயல்படுத்துவதற்காகப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள், ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கத் தானாகவே தகுதி பெறுவர்.

ii. அத்தகைய ஒப்பந்ததாரர்கள், அந்தந்தத் துறைகளில் தங்களின் பதிவு வகுப்பிற்குரிய அதிகபட்ச நிதி வரம்பு வரையிலான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கலாம். இத்தகைய ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கும்போது, அவர்கள் பதிவுத் தொகையைச் சமர்ப்பித்தவுடன், அந்தந்த மாவட்டத்தின் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் தானாகவே சேர்க்கப்படுவார்.

10. பதிவு நடைமுறை (Registration Process)

i. விண்ணப்பப் படிவங்களை tnrd.gov.in என்ற இணையதளத்திலிருந்து மட்டுமே பதிவிறக்கம் செய்ய முடியும்.

ii. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை இதர ஆவணங்களுடன் சேர்த்து சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால்/இணையவழி மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். அதைப் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் ரசீது சம்பந்தப்பட்ட அலுவலரால் முறையாக வழங்கப்பட வேண்டும்.

iii. ஆவணங்களைச் சரிபார்த்தல் மற்றும் ஒப்புதல் அளித்தல்/நிராகரித்தல் ஆகிய நடைமுறைகள், பதிவிற்கான விண்ணப்பம் பெறப்பட்ட 15 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

iv. ஒப்பந்த பதிவில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பப்படும்.

v. வருங்காலங்களில் ஒப்பந்ததாரர்கள் இணையவழியாக விண்ணப்பித்து பதிவு செய்ய வசதி ஏற்படுத்தப்படும்.

11. பதிவைப் புதுப்பித்தல் (Renewal of Registration)

i. **செல்லுபடியாகும் காலம்:** ஒருமுறை பதிவுசெய்தால், அப்பதிவு மூன்று ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும். இந்த அரசாணை வெளியிடுவதற்கு முன்பே பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு, பதிவு செய்யப்பட்ட தேதியானது இந்த அரசாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படும்.

ii. **தானாக புதுப்பித்தல்:** பதிவு காலத்திற்குள், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் குறைந்தபட்சம் ஒரு பணியையாவது செயல்படுத்திய ஒப்பந்ததாரர்களின் பதிவானது, மேலும் மூன்று ஆண்டுகளுக்குத் தானாகவே புதுப்பிக்கப்படும்.

iii. **கட்டாயப் புதுப்பித்தல்:** பதிவு செல்லுபடியாகும் காலத்திற்குள் எந்தவொரு பணியையும் செய்யாத பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் அனைவரும், பதிவு செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு முன்பாகப் பதிவைப் புதுப்பிக்க விண்ணப்பிக்க வேண்டும்; அவ்வாறு விண்ணப்பிக்கும் போது அவர்கள் பதிவுக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

12. பதிவுக் கட்டணம் (Registration Fee)

i. ஒரு மாவட்டத்தில் பதிவு செய்ய விரும்பும் ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் நிர்ணயிக்கப்பட்ட பதிவுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். இக்கட்டணம் பின்வருபவர்களுக்குப் பொருந்தும்:

a) புதிய விண்ணப்பதாரர்கள்.

b) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தவிர்த்த பிற அரசுத் துறைகள்/முகமைகளில் பதிவுசெய்து, தற்போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்கள்.

c) ஒரு மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ஏற்கெனவே பதிவுசெய்து, மற்றொரு மாவட்டத்தில் (புவியியல் ரீதியாக எல்லையை பகிர்ந்துகொள்ளும் மாவட்டம் அல்லாத பிற மாவட்டம்) பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்கள்.

d) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ஏற்கெனவே பதிவுசெய்து, உயர் வகுப்பிற்கு மேம்படுத்த விண்ணப்பிக்கும் ஒப்பந்ததாரர்கள்.

e) பதிவுச் செல்லுபடியாகும் காலம் முடிந்த 6 மாதங்களுக்கும் மேலாகத் தங்களது பதிவைப் புதுப்பிக்கத் தவறிய அல்லது தானாக புதுப்பித்தலுக்குத் தகுதி பெறாத ஒப்பந்ததாரர்கள். பதிவு காலம் முடிந்து 6 மாதங்களுக்கும் குறைவாக இருக்கும் பட்சத்தில், ஒப்பந்ததாரர் பதிவுக் கட்டணத்தில் 50% செலுத்த வேண்டும்.

f) தடைக்காலம் முடிவடைந்த பிறகு மீண்டும் பதிவு செய்ய விரும்பும் கருப்புப் பட்டியலில் வைக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள்.

g) பிற துறைகளில் பதிவுசெய்து, ஊரக வளர்ச்சித் துறையில் பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்கள்.

ii. பதிவுக் கட்டணங்கள் நியமிக்கப்பட்ட வங்கித் கணக்கிற்கு இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

iii. கட்டண விவரங்கள் (Amount for the fees)

கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறு வகுப்புகளைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்களுக்கான பதிவுக் கட்டண விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை–II (Table–II) – ஒப்பந்ததாரர்களின் வகுப்பு மற்றும் பதிவுக் கட்டணம்

ஒப்பந்ததாரர்களின் வகுப்பு (Class of Contractors)	பதிவுக் கட்டணம் (Registration Fee)
வகுப்பு 1A (Class 1A)	இல்லை (Nil)
வகுப்பு I (Class I)	ரூ. 30,000
வகுப்பு II (Class II)	ரூ. 20,000
புதிதாக விண்ணபதாரர்கள் (New Entrants)	ரூ. 10,000

iv. கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு (Exemption from payment)

பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்குப் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்:

a) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (தனிநபர், கூட்டாண்மை நிறுவனம் மற்றும் தனியுரிமை வரம்பிற்குட்பட்ட நிறுவனம் – நிறுவனத்தின் பங்குதாரர்கள் அல்லது இயக்குநர் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆதிதிராவிடர்/பழங்குடியினராக இருத்தல் வேண்டும்).

b) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (கலப்புத் திருமணம் செய்த தம்பதியர்).

c) சுய உதவிக் குழுக்கள் (SHG) / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF).

d) வேலையில்லாத கட்டுமானப் பொறியியல் பட்டதாரிகள் / கட்டுமானப் பொறியியல் பட்டையப் படிப்பு படித்தவர்கள் (பதிவு செய்யக் கோருவதற்கு முந்தைய 5 ஆண்டுகளுக்குள் படிப்பை முடித்திருக்க வேண்டும்).

v. சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் வேலையில்லாத பட்டதாரி/ கட்டுமான பொறியியல் பட்டைய படிப்பு படித்தவர்கள் ஆகியோருக்கு வருமான வரி / சரக்கு மற்றும் சேவைகள் வரி சான்றிதழ் சமர்ப்பிப்பதிலிருந்தும் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்படும். ஆனால், இவர்கள் ரூ. 5 இலட்சம் வரையிலான மதிப்புள்ள பணிகளுக்கு மட்டுமே தகுதி உடையவர்கள் ஆவர்; மேலும் இவர்களுக்கு வழங்கப்படும் பணிகளின் ஒட்டுமொத்த மதிப்பு எந்தவொரு காலகட்டத்திலும் ரூ. 10 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

vi. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் (TNCDW) அங்கீகரிக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மட்டுமே இதற்குத்

தகுதியானவை. வேலையில்லாத கட்டுமான பொறியாளர்கள், தாங்கள் வேலையில்லாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரிடமிருந்து பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவைத் தொடர்ந்து செயல்பாட்டில் வைத்திருக்க இந்தச் சான்றிதழ் ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒருமுறை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வேலையில்லாத பொறியாளர்களுக்கு இச்சலுகை ஒருமுறை மட்டுமே 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படும்.

vii. மேல் உள்ள பத்திகளில் குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் அல்லாமல் ஒப்பந்த பதிவிருக்கு விண்ணப்பிக்கும் பெண் ஒப்பந்ததாரர்களுக்கு பதிவு கட்டணம் செலுத்துவதிலிருந்து மட்டும் முழு விலக்கு அளிக்கப்படும். ஏனைய நிபந்தனைகள் இவர்களுக்கும் முழுவதுமாக பொருந்தும். இப்பிரிவு, தனி உரிமையாளராக (Sole Proprietor) பதிவு செய்யப்படும் தனிநபர் ஒப்பந்ததாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

13. பதிவு செய்வதற்கான ஆவணங்கள் (Documents for registration)

பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து, நிர்ணயிக்கப்பட்ட பதிவுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்:

i. விண்ணப்பதாரரின் பெயரில் வருமான வரி / சரக்கு மற்றும் சேவைகள் வரி கணக்குத் தாக்கல் நகல்கள், தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கை மற்றும் தணிக்கையாளரால் வழங்கப்பட்ட ஆண்டு வருமானச் சான்றிதழ் ஆகியவற்றின் சுய சான்றொப்பமிட்ட ஒளிநகல்கள். விண்ணப்பதாரரின் பெயரில் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பிற்கு இணையான பணி அனுபவ ஆவணங்களின் சுய சான்றொப்பமிட்ட ஒளிநகல்.

ii. விண்ணப்பதாரருக்குச் சொந்தமான சொத்து தொடர்பாகப் பெறப்பட்ட, வில்லங்கம் ஏதுமில்லை என்பதற்கான 'வில்லங்கச் சான்றிதழ்' (விண்ணப்பிக்கும் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்) சுய சான்றொப்பமிட்ட ஒளிநகல்.

iii. நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை நகல்.

iv. விண்ணப்பதாரர் மாநிலத்திற்குள்ளோ அல்லது மாநிலத்திற்கு வெளியிலோ எந்தவொரு அரசுத் துறையாலும்/முகமையாலும் தற்போது

கருப்புப் பட்டியலில் வைக்கப்படவில்லை என்பதற்கான உறுதிமொழிப் பத்திரம்.

v. பதிவு செய்யவேண்டிய மதிப்பிற்கு இணையான பதிவுத் தொகைக்கு திரும்பப் பெற முடியாத வங்கி உத்திரவாதம்.

vi. பதிவுக் கட்டணத்தை இணையவழியாகச் செலுத்தியதற்கான சான்று.

14. தற்போதுள்ள பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களை புதிய முறைக்கு மாற்றுதல் (Migration)

முந்தைய நடைமுறையின் கீழ் பதிவுசெய்துள்ள தற்போதைய ஒப்பந்ததாரர்கள் அனைவரும், அவர்களின் முந்தைய வகுப்பின் அதிகபட்ச நிதி வரம்பின் அடிப்படையில், அதற்கு இணையான புதிய வகுப்பிற்குத் தானாகவே மாற்றப்படுவார்கள். இந்த வழிகாட்டுதல்களின்படி புதிய பதிவுத் தொகையைச் சமர்ப்பித்தவுடன், அவர்களின் தற்போதைய வங்கி உத்திரவாதம் விடுவிக்கப்படும்.

15. ஒப்பந்ததாரர்களைக் கருப்புப் பட்டியலில் சேர்த்தல் / தடை செய்தல்

i) பதிவு செய்யும் அலுவலர் தன்னிச்சையாகவோ அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் எந்த ஒரு அலுவலரின் அறிக்கையின் அடிப்படையிலோ பதிவு செய்யப்பட ஒப்பந்ததாரர்களை கருப்புப் பட்டியலில் சேர்க்க அல்லது தடை செய்ய 30 நாட்கள் விளக்கம் அளிக்க அவகாசம் வழங்கி விளக்கம் கோரும் தாக்கீது (show-cause notice) அனுப்பவேண்டும். ஒப்பந்ததாரர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளில் பின்வரும் விதி மீறல்களை புரிந்துள்ளார் என பதிவு செய்யும் அலுவலர் கருதினால், கருப்புப் பட்டியலில் சேர்க்க அல்லது தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

தடை செய்தல் (Banning)

ii. ஒப்பந்ததாரர் ஒரு வருடத்திற்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்களில், முறையான காரணம் இன்றி, வழக்கத்திற்கு மாறாக மிக அதிக அல்லது வழக்கத்திற்கு மாறாக மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பித்து, அதன் விளைவாக ஒப்பந்தப்புள்ளி நடைமுறையில் தாமதத்தை ஏற்படுத்துதல்.

iii. ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பிக்கும் போது தேவையான முன்வைப்புத் தொகையைச் சமர்ப்பிக்கத் தவறுதல்.

iv. ஒப்பந்ததாரர், ஏற்புக்கடிதம் (LoA) வழங்கப்பட்ட பிறகு, ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொள்ளத் தவறுதல் அல்லது தேவையான பிணைத் தொகையைச் செலுத்தத் தவறுதல் அல்லது ஏற்புக்கடிதம் வழங்கப்பட்ட பிறகு ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 15 நாட்களுக்கும் மேலாக ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ள காலதாமதம் செய்தல்.

v. ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பித்த பிறகு அவற்றைத் திரும்பப் பெறுதல் (தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள், 2000 (TNTITR) விதி 20A–இன் படி ஒப்பந்தப்புள்ளிகளைத் திரும்பப் பெற அனுமதி இல்லை).

vi. ஒப்பந்ததாரர்கள் மீதான இத்தகைய தடையானது குறுகிய காலத்திற்கு மட்டுமே இருக்கும். மேலும் இந்த நடவடிக்கை மேற்கொண்ட சம்பந்தப்பட்ட கொள்முதல் அமைப்பால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மட்டுமே பொருந்தும். இத்தடையின் போது ஒப்பந்ததாரரின் பதிவு ரத்து செய்யப்பட மாட்டாது. தடைக்காலத்தில் சம்பந்தப்பட்ட கொள்முதல் அமைப்பால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் அவர் பங்கேற்பது தடைசெய்யப்படும். தடைக்காலம் குறைந்தபட்சம் 6 முதல் அதிகபட்சம் 12 மாதங்கள் வரை இருக்கும். தடைக்காலம் முடிந்தவுடன், சம்பந்தப்பட்ட கொள்முதல் அமைப்பால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க அந்த ஒப்பந்ததாரர் தானாகவே தகுதி பெறுவார். ஒப்பந்ததாரர் மீதான இத்தகைய தடை, அவர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் உள்ள பிற கொள்முதல் அமைப்புகளால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்பதைத் தடை செய்யாது.

கருப்புப் பட்டியலில் சேர்த்தல் (Blacklisting)

vii. ஒப்பந்த ஆணை/ஒப்பந்த உடன்படிக்கையில் வழங்கப்பட்டுள்ள இலக்குகளின்படி தனக்கு அளிக்கப்பட்ட பணியின் முன்னேற்றத்தை ஒப்பந்ததாரர் தொடர்ந்து தாமதப்படுத்துதல்.

viii. ஒப்பந்ததாரர் பணிகளில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்யத் தவறுதல் அல்லது தரம் குறைவாக பணியைச் செயல்படுத்துதல்.

ix. பணியைச் செயல்படுத்துவதற்காகத் துறையினால் வழங்கப்பட்ட எந்தவொரு பொருட்களையும் ஒப்பந்ததாரர் முறைகேடாகப் பயன்படுத்துதல் அல்லது வேறு பணிக்கு பயன்படுத்துதல்.

x. ஒப்பந்த உடன்படிக்கையின் முக்கிய நிபந்தனைகளை ஒப்பந்ததாரர் தொடர்ந்து மீறுதல். இது ஒப்பந்த நிபந்தனைகளை மீறுவதாக கருதப்படும்.

xi. இலஞ்சம், ஊழல், பிற ஒப்பந்ததாரர்களுடன் கூட்டுச் சேருதல், குழு அமைத்து விலையை நிர்ணயித்தல் மற்றும் ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படை நோக்கத்திற்கு எதிராக போட்டியினை குறைக்கும் வகையில் செயல்படுவது.

xii. ஒப்பந்ததாரர் அல்லது அவரது கூட்டாளர்கள் அல்லது அவரது பிரதிநிதி, வணிகத் தொடர்புகள் சார்ந்த ஒழுக்கக்கேடான குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருத்தல்.

xiii. கொள்முதல் அமைப்பை தவறாக வழிநடத்தும் மற்றும் ஏமாற்றும் நோக்கத்துடன், ஒப்பந்ததாரர் போலியான சுய–சான்றளிப்பு/போலி விவரங்களை வழங்குதல் அல்லது பதிவு, புதுப்பித்தல் சான்றிதழை போலியாகச் சமர்ப்பித்தல்.

xiv. ஒப்பந்ததாரரைக் கருப்புப் பட்டியலில் சேர்ப்பது அவரது பதிவை ரத்து செய்ய வழிவகுக்கும்; மேலும் அவர் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டதிலிருந்து 12 முதல் 36 மாதங்கள் வரை மீண்டும் பதிவு செய்ய அனுமதிக்கப்பட மாட்டார். ஒப்பந்ததாரரைக் கருப்புப் பட்டியலில் சேர்ப்பது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்குள் தொடர்விளைவை ஏற்படுத்தும். அந்த ஒப்பந்ததாரருடன் நடைமுறையில் உள்ள அனைத்து ஒப்பந்தங்களும் முன்கூட்டியே முடிவுக்கு கொண்டுவரப்படும். இந்த நடவடிக்கையில், மீதமுள்ள பணிகளைப் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் செயல்படுத்த ஏற்படும் கூடுதல் செலவினங்களை கொள்முதல் அமைப்பு ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையில் ஈடு செய்யும். அவ்வாறு ஈடு செய்ய முடியாத பட்சத்தில் வருவாய் வசூலிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கூடுதல் செலவினங்களை ஈடுசெய்த பிறகு ஒப்பந்தங்களிலிருந்து வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ஏதேனும் மீதம் இருப்பின் 60 நாட்களுக்குள் விடுவிக்கப்படும்.

16. தடை செய்தல் அல்லது கருப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கான நடைமுறை

பதிவு செய்யும் அலுவலர் ஒரு ஒப்பந்ததாரரைத் தடை செய்ய அல்லது கருப்புப் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க விரும்பினால், பின்வரும் நடைமுறையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்:

a) பதிவு செய்யும் அலுவலர், எந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு விளக்கம் கோரும் தாக்கீதை வழங்க வேண்டும்.

b) ஒப்பந்ததாரர் தனது விளக்கம், காரணங்கள் போன்றவற்றைச் சமர்ப்பிக்க 30 நாட்கள் அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

c) ஒப்பந்ததாரருக்கான அனைத்துத் தொடர்புகளும் எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும்; மேலும் அவை உரிய ஒப்புதல் ரசீதுடன் பதிவுத் தபால் அல்லது சிறப்புத் தூதுவர் மூலமாக அனுப்படவேண்டும்.

d) பதிவு செய்யும் அலுவலரின் அலுவலக மின்னஞ்சலில் இருந்து ஒப்பந்ததாரரின் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் நோட்டீஸ், விளக்கம் கோரும் தாக்கீது வழங்கப்பட்டதற்கான ஆதாரமாகக் கருதப்படும்.

e) எழுத்துப்பூர்வமாகப் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், ஒப்பந்ததாரர் தனது காரணங்களை நேரில் தெரிவிப்பதற்குப் பதிவு செய்யும் அலுவலர் ஒரு நியாயமான வாய்ப்பை வழங்க வேண்டும்.

f) மேற்கண்ட நடைமுறைக்குப் பிறகும், ஒப்பந்ததாரரைக் கருப்புப் பட்டியலில் சேர்ப்பது அவசியம் என்று பதிவு செய்யும் அலுவலர் கருதினால், அதற்கான உத்தரவுகளை அவர் பிறப்பிக்கலாம். இந்த உத்தரவானது மாவட்ட ஆட்சியர் மூலமாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டு, பின்னர் பொதுத் (S.C.) துறைக்கு அனுப்பி வைக்கப்படும்.

17. பதிவை ரத்து செய்தல் (Cancellation of Registration)

ஒப்பந்ததாரர், 1872–ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படி பின்வரும் காரணங்களால் ஒப்பந்தம் செய்துகொள்ளும் தகுதியை இழந்தால் அல்லது நிதி வருவாய் தேவையான அளவிற்கு குறைவாக இருக்கும் பட்சத்தில், அவரது பதிவு ரத்து செய்யப்படும்:

i. தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் திவாலானவர் என அறிவிக்கப்படுதல்,

ii. மனநலம் பாதிக்கப்படுதல்,

iii. ஏதவாது ஒரு சட்டத்தின் கீழ் ஒப்பந்தம் செய்ய தகுதியற்றவராக்கப்படுதல்.

18. வருவாய் வசூலிப்பு (Revenue Recovery)

பணிகளைக் கைவிடுதல், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பணிகளை முடிக்கத் தவறுதல் அல்லது அரசாங்கத்திற்கு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு நிதி இழப்பு ஏற்படுத்தும் பிற விதிமீறல்கள் உள்ளிட்ட ஒப்பந்தக் கடமைகளை மீறும் எந்தவொரு ஒப்பந்ததாரரும், செலுத்த வேண்டிய தொகைகளைத் திரும்பச் செலுத்தக் கடமைப்பட்டவராவார். இதுபோன்ற வசூலிப்பு, 1864 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வருவாய்ச் சட்டத்தின் விதிகளின் கீழ் வருவாய் வசூலிப்பு செய்யப்படலாம். பதிவு செய்யும் அலுவலர், உரிய நடைமுறைகளைப் பின்பற்றிய பிறகு அத்தகைய ஒப்பந்ததாரரின் பதிவை மறுக்க, தற்காலிகமாக நிறுத்த, ரத்து செய்ய அல்லது பதிவைப் புதுப்பிக்க மறுக்க அதிகாரம் பெற்றவர் ஆவார்.

19. கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மீண்டும் பதிவு செய்தல்

கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஒப்பந்ததாரர், அவரது தடைக்காலம் முடிந்த பிறகு மட்டுமே மீண்டும் பதிவு செய்ய விண்ணப்பிக்க முடியும். பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் அடிப்படையில், பதிவு செய்யும் அலுவலர் அந்த ஒப்பந்ததாரரை மீண்டும் பதிவு செய்யலாம்:

a) விண்ணப்பதாரரின் பெயரில் வருமான வரி / சரக்கு மற்றும் சேவைகள் வரி கணக்குத் தாக்கல் நகல்கள், தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கை மற்றும் தணிக்கையாளரால் வழங்கப்பட்ட ஆண்டு வருமானச் சான்றிதழ் ஆகியவற்றின் சுய சான்றொப்பமிட்ட ஒளிநகல்கள். விண்ணப்பதாரரின் பெயரில் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பிற்கு இணையான பணி அனுபவ ஆவணங்களின் சுய சான்றொப்பமிட்ட ஒளிநகல்.

b) விண்ணப்பதாரருக்குச் சொந்தமான சொத்து தொடர்பாகப் பெறப்பட்ட, வில்லங்கம் ஏதுமில்லை என்பதற்கான 'வில்லங்கச் சான்றிதழ்' (விண்ணப்பிக்கும் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்) சுய சான்றொப்பமிட்ட ஒளிநகல்.

c) நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை நகல்.

d) விண்ணப்பதாரர் மாநிலத்திற்குள்ளோ அல்லது மாநிலத்திற்கு வெளியிலோ எந்தவொரு அரசுத் துறையாலும்/முகமையாலும் தற்போது

கருப்புப் பட்டியலில் வைக்கப்படவில்லை என்பதற்கான உறுதிமொழிப் பத்திரம்.

e) பதிவு செய்யவேண்டிய மதிப்பிற்கு இணையான பதிவுத் தொகைக்கு திரும்பப் பெற முடியாத வங்கி உத்திரவாதம்.

f) பதிவுக் கட்டணத்தை இணையவழியாகச் செலுத்தியதற்கான சான்று.

20. மேல்முறையீட்டு அலுவலர் (Appellate Authority)

விண்ணப்பதாரர் அல்லது ஒப்பந்ததாரர் பின்வரும் காரணங்களுக்காக மேல்முறையீட்டு அலுவலரிடம் குறைகளைத் தெரிவித்துத் தீர்வு கோரலாம்:

a) பதிவு அல்லது புதுப்பித்தலுக்கான விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளாமை.

b) ஒப்பந்ததாரரைக் கருப்புப் பட்டியலில் சேர்த்தல் மற்றும்

c) பதிவை ரத்து செய்தல்.

இதற்கான மேல்முறையீட்டு அலுவலர் மாவட்ட ஆட்சியர் ஆவார்.

21. விலக்குக் கூறு (Savings Clause)

தற்போது நடைமுறையிலுள்ள அனைத்துத் துறைசார்ந்த விதிகள், நடைமுறைகள் மற்றும் உத்தரவுகள், இந்த வழிகாட்டுதல்களின் விதிகளுக்கு முரணாக இல்லாத வரையில் அந்த விதிமுறைகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

அரசுச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தேவைப்படும் போது இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களுடன் கலந்தாலோசித்து இந்த வழிகாட்டுநெறிமுறைகளில் மாற்றங்களைச் செய்ய அதிகாரம் அளிக்கப்படுகிறது.